# பட்டயம்

மலர் - 05 ஜனவரி - 2009 இதழ் - 03

Date of Issue : 01-01-2009

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 5

Issue : 3 Price Per Copy : Rs.5.00




கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும் (ஏசாயா 40/5)

THE GLORY OF THE LORD SHALL BE REVEALED
(ISAIAH 40/5)

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.org

“இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்” (ஆகாய்2:7)

# ஆசிரியர்கடிதம்

## (ஜனவரி - 2009)

கர்த்தருக்குப் பிரியமானவைகளையே யோசித்தும், பேசியும், செய்தும் கொண்டிருக்கிற கர்த்தருடைய பிள்ளைகளே! இந்தப் புதிய வருடத்தில் கர்த்தர் நமக்கு நல்ல வாக்குத்தத்தத்தைத் தந்துள்ளார். வெளி. 21/5 எடுத்து வாசியுங்கள். இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்பதே அந்த அருமையான வாக்குத்தத்தம்.

BEHOLD I MAKE ALL
THINGS NEW (REV 21/5) 2009

இந்த வாக்குத்தத்தத்தை உங்கள் வீடுகளிலும் வேலை ஸ்தலங்களிலும் உங்கள் கண்கள் காணும்படி எழுதி வைத்து அதன் அருகில் 2009 என்று எழுதுங்கள்.

அந்த ஜீவவார்த்தையை இந்த வருடம் முழுவதும் வாசித்து விசுவாசித்து தொடர்ந்து ஜெபியுங்கள். நிச்சயமாகக் கர்த்தர் உங்கள் வாழ்க்கையில், வேலையில், ஊழியத்தில், குடும்பத்தில் கடந்த காலத்தில் வந்த எல்லாத் தோல்விகளையும் மாற்றுவார். எல்லா அநியாயங்களையும் மாற்றுவார். எல்லா அவபக்தி கிரியைகளையும் அகற்றுவார். எல்லா மனுஷ தந்திரங்களையும் கவிழ்ப்பார். எல்லா சாத்தானின் தொல்லைகளையும் தகர்ப்பார். எல்லாக் கடன்களையும் மாற்றுவார். எல்லா வியாதிகளையும் மாற்றுவார். எல்லா வேதனைகளையும் மாற்றுவார். எல்லா சாபங்களையும் மாற்றுவார். எல்லா பாவங்களையும் மாற்றுவார். தேவன் தாமே உங்களோடே உங்கள் தகப்பனாக இருப்பார். நீங்களும் அவருடைய ஜனங்களாயிருப்பீர்கள். கர்த்தர் தாமே உங்களையும் என்னையும் சீயோனிருந்து ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

We wish you a Happy 2009

இவண்,
Rev. Dr. **Princeton Joy**
ஆசிரியர்.

**20. உயிர் யார் கையில் இருக்கிறது?**

"குணப்படு; கணப்பொழுதினில் காயம் மறைந்து போகும். காயம் என்றால் சரீரம். வண்டியில் போகிறான்; எங்கேயாவது முட்டினால் 1 Second ல் சாவு. பழக்கடையில் ஒருவன் பழம் வாங்கச் சென்றான்; கையில் வாங்கி வாயில் வைக்கும் போது உயிர் போய் விட்டது. 1 Second ல் உயிர் போகலாம்; நோய் வந்தால் தான் உயிர் போகும் என சட்டம் இல்லை; நோய் இல்லாமலே உயிர் போகலாம்; சிலர் உறக்கத்திலே போய் விடுகிறார்கள்; சில டிரைவர்மாருக்கு வண்டி ஓட்டிக்கொண்டு செல்லும் போதே உயிர் போய் விடுகிறது. ஒரு நோயாளிக்கு அறுவை சிகிச்சை பண்ண மருத்துவர் operation theatre க்குள் சென்றார். பாதி operation பண்ணிக் கொண்டிருக்கும் போது மருத்துவர் மரித்து போய் விட்டார். அப்படியானால் patient நிலமை என்னவாகும்? உறவினர்கள் operation success ஆகும் என வெளியே காத்திருப்பார்கள். ஆகவே உயிர் என்பது நம் கைகளில் இல்லை. யாருக்கு எந்த நேரம் என நமக்குத் தெரியாது. ஆகவே உயிர் நம் ஆண்டவர் கரங்களில் உள்ளது. (சங்.31/15) (லூக்கா 12/20).

**21. எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?**

உன் உயிர் இருக்கிற நாட்களில் நீ குணப்படு; ஆத்துமாவில் குணப்படு; சரீரத்திற்காக எவ்வளவோ பிரயாசப்படுகிறார்கள்; அழகு நிலையங்களுக்கு செல்கிறார்கள்; மனுஷன் அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான்; மருத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறான்; நோய் என்றால் உடனே மருத்துவம் பார்க்கிறார்கள்; சரீரத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து சரீரத்தைப் பாதுகாக்கிறார்கள்.

'சரீரமுயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது' என ஆண்டவர் சொல்கிறார். ஆத்மாவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்; பெற்றோர்கள் பிள்ளைகளின் படிப்பிற்காக எவ்வளவோ நேரம் செலவழிக்கிறார்கள். யாரைப் பார்த்தாலும் பிள்ளைகளைப் பார்த்து 'படி, படி. நல்லாப் படி' என்று தான் சொல்கிறார்கள். அதே சமயம் 'கர்த்தரின் வேதத்தைப் படி' என சொல்வதில்லை. சிலர் வேதத்தை படிக்க ஆலயத்துக்குச் சென்றேன். அங்கே ஒரே கும்மாளம் தான் நடக்குது; எனக்குச் சொல்லித்தர ஒருவரும் இல்லை என சொல்கிறார்கள். (1 யோ 3/2)

**22. ஆத்துமா குணப்பட என்ன செய்ய வேண்டும்?**

a) **வசனத்துக்கு செவி கொடுங்கள்:**

வேதத்தைப் படியுங்கள்; வேதம் எங்கே கற்றுக் கொடுக்கப்படுகிறதோ அங்கே சென்று படியுங்கள். சாலமோனின் ஞானத்தைக் கேட்க சேபா நாட்டு இளவரசி எவ்வளவோ

தூரத்திருந்து வந்தாள். சாலமோனிலும் பெரியவர் இங்கே நம்மோடு இருக்கிறார்.

சிலர் வசனத்துக்குச் செவி கொடுப்பதே இல்லை. அவர்களுக்கு சாதகமாக வசனம் இருந்தால் காதும், கண்ணும் திறந்திருக்கும். இல்லாவிட்டால் காதும் கண்ணும் மூடிவிடும்; ஆள் அங்கே தான் இருக்கும்; மனம் எங்கேயோ போய்விடும். அவர்களுக்கு பிரியமாக ஊழியர் தாளம் போட்டால் அவர்களும் தாளம் போடுவார்கள். அவர்கள் வாழ்க்கையில் உள்ள தப்பிதங்களை ஆண்டவர் எச்சரித்தால் கோபப்படுவார்கள்; ஆண்டவர் மேலும் கோபம் வரும்; ஊழியக்காரர் மேலும் கோபம் வரும். அப்படியானால் உன் ஆத்துமாவிற்கு வெளிச்சம் இல்லை; உன் ஆத்துமா குணப்பட வாய்ப்பே இல்லை.

உண்மையிலே T.B. நோய் இருக்கும்; test பண்ணி சொன்னால் கோபப்படுவான்; எங்கள் தாத்தாவுக்குக் கிடையாது; எங்கள் குடும்பத்தில் யாருக்குமே கிடையாது என்று சொல்வான். X-ray யை கொண்டு போய் ஒவ்வொரு மருத்துவரிடமாகச் செல்வான். எந்த மருத்துவர் T.B. இல்லை என சொல்வாரோ அவர்தான் நல்ல மருத்துவர் என்பான். கடைசியில் T.B. முற்றி ஆள் மரித்துப் போகும். ஆலயத்திலும் சிலர் இப்படித்தான் இருக்கிறார்கள்; ஆண்டவர் கண்டித்து பேசினால் கோபப்படுவார்கள். பிறகு ஆலயத்துக்கே வரமாட்டார்கள்; ஊழியக்காரரை குறைகூறி விட்டுப் போய் விடுவார்கள்; உன் ஆத்துமா குணமடையாது. (எபி.12/25)

b) **உன் குற்றங்களை உணர்ந்து அறிக்கையிடு:**

பிறரிடம் என்ன தவறு இருக்கிறது என நாம் ஆராய்ந்து பார்க்கிறோம். உன்னிடம் என்ன தவறு இருக்கிறது என உன்னை ஆராய்ந்து பார்த்து நீ குணப்படு. ஒருவன் தன் பற்களைக் துலக்குவதே கிடையாது. ஆனால் பிறனைப் பார்த்து உன் வாய் நாற்றமெடுக்கிறது என அவன் சொன்னால் எப்படியிருக்கும்? அது போல முதலாவது நம்மில் உள்ள குற்றத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இன்று என் உயிர் போய் விட்டால் அல்லது இன்று ஆண்டவர் வந்தால் என் நிலமை என்னவாகும்? என சோதித்துப் பார்க்க வேண்டும். (மத். 7/5)

**நம் ஆத்துமாவில் என்ன நோய் இருக்கிறது என ஆராய்ந்து பார்த்து குணப்பட வேண்டும்.** நம் இருதயத்தில் உள்ளத்தில், கண்களில் என்ன நோய் இருக்கிறது என ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆத்மீக பிரகாரமான நோய் என்ன இருக்கிறது? நம் கண்கள் இச்சிக்கிறதா? காதுகள் கேட்கத் தகாதவைகளைக் கேட்பதில் பிரியமாக இருக்கிறதா? வாயில் பேசத்தகாத வார்த்தைகள் இருக்கிறதா? புறங்கூறும் வார்த்தைகள், சபிக்கும் வார்த்தைகள், கோள்மூட்டும் வார்த்தைகள்

இருக்கிறதா? பொய்களைப் பிணைக்கிற வார்த்தைகள், கெட்ட வார்த்தைகள், தூஷண வார்த்தைகள் இருக்கிறதா? வம்பு வார்த்தைகள், முறுமுறுப்பின் வார்த்தைகள் இருக்கிறதா? உங்கள் வாயில் போதைப் பழக்கம், பீடி, சிகரெட் பழக்கம் இருக்கிறதா? (1யோ 3/2)

உங்கள் கைகள் செய்யத்தகாததைச் செய்கிறதா? லஞ்சம் வாங்குகிறதா? திருடுகிறதா? உங்கள் கைகள் பிறருக்குத் தீமை செய்கிறதா? உங்கள் கால்கள் நிற்கத் தகாத இடங்களில் நிற்கிறதா? ஆண்டவருக்கு பிரியமில்லாத இடத்திற்கு உங்கள் கால்கள் போகிறதா? உங்கள் உடைகளால் பிறருக்கு இடறல் ஏற்படுகிறதா? இடறல் உண்டாக்குகிறவனுக்கு ஐயோ என ஆண்டவர் சொல்கிறார். (மத். 18/6)

c) **ஆண்டவரிடம் ஜெபி**

நான் குணப்பட வேண்டுமென்று தான் நினைக்கிறேன். பாவத்தை செய்யாமல் இருக்கத்தான் நினைக்கிறேன்; ஆனால் முடியவில்லை என நீங்கள் சொல்லலாம். 'பாவி' என உன்னை தேவன் தள்ளவில்லை; பாவத்தை உன்னை விட்டு விலக்க அவர் உனக்கு உதவி செய்வார் என நம்பு. கண்களால் பாவம் செய்யாதபடி உதவி செய்யும் என ஜெபித்தால் பாவத்தின் பிடியிருந்து விடுவிப்பார்.

எல்லா மார்க்கங்களும் அதைச் செய்யாதே, இதை செய்யாதே என சொல்லலாம். ஆனால் பாவம் செய்யாமருக்க உதவி செய்ய வல்லவர் இயேசு மட்டுமே. அவர் வழி சொன்னது மட்டுமல்ல, அந்த வழி படி வாழ்ந்து காட்டினார்; வாழவும் உதவி செய்கிறார். விடமுடியாத பாவம் என ஒன்றும் இல்லை; ஆண்டவர் உதவியினால் எல்லா பாவங்களையும் விட்டுவிட முடியும். "அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிக்கிறார்". ஆகையால் இயேசுவே இரட்சகர். ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு பாவத்தின் பிடியிருந்து விடுதலை இல்லை. இயேசுவை விசுவாசித்தால் பாவத்தை நீ மேற்கொள்ள முடியும்.

"பாவியாகவே வாரேன்
பாவம் போக்கும் பயாம்
என் இயேசுவே வாரேன்
பாவியாகவே வாரேன்"

உன் ஆத்துமா குணப்பட்டு, வாழ இயேசு உன்னை அழைக்கிறார்.

இயேசு உன் பாவப் பழக்கத்திருந்து உனக்கு விடுதலை தர வல்லவர் என்று நிச்சயமாய் விசுவாசித்து ஜெபிப்பாயானால் பாவத்தின் பிடியினின்று உனக்கு விடுதலை உண்டு; உண்டு; உண்டு. (மத். 1/21)

**23. கிருபையின் உடன்படிக்கை என்றால் என்ன?**

தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு

நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன் (ஏசாயா. 55/3). இது தேவன் நம்மோடு பண்ணும் உடன்படிக்கை; கிருபை இருந்தால் தான் இந்தக் கடைசிக் காலத்தில் நாம் தப்பிக் கொள்ள முடியும். கிருபை மேல் கிருபை பெற வேண்டும். ஏனென்றால் பல விதமான சாத்தானின் சோதனைகள் நம்மை முட்டி மோதிக் கொண்டிருக்கிறது. அவர் கிருபையின் உடன்படிக்கையின் தேவன் தான். ஆனால் நீ உடன்படிக்கைக்குப் பாத்திரவானாய் இருந்து கிருபைக்குக் காத்திருக்க வேண்டும். **கிருபையைப் பெறாவிட்டால் நாம் நிலைநிற்க முடியாது.**

போதிக்கலாம்; பெரிய காரியங்களை செய்யலாம்; ஆனால் முடிவு வரை நிலைநிற்க வேண்டும்; நிலை நிற்க வேண்டுமானால் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும். எனக்குத் தெரியாத வசனமா? எனக்குத் தெரியாத போதகமா? என போதித்துக் கொண்டு மட்டும் இருந்தால் சாத்தான் தள்ளிப் போட்டு விடுவான்.

3 வித மக்கள் இருக்கிறார்கள்.

1. Ration கடையில் மண்ணெண்ணெய் வாங்க தகுதியிருந்து வாங்கிய கூட்டம் - இது கிருபை பெற தகுதியிருந்து கிருபையைப் பெற்றுக் கொள்ளும் கூட்டம்.
2. தகுதி உண்டு; ஆனால் மண்ணெண்ணெய் வாங்காத கூட்டம் - இது கிருபை பெற தகுதியிருந்தும் கிருபைக்குக் காத்திருக்காத கூட்டம்.
3. Ration கடையில் மண்ணெண்ணெய் வாங்க தகுதியில்லாத கூட்டம் இது கிருபை பெற தகுதியில்லாத கூட்டம்

Ration கடையில் 5 லிட்டர் தான் கிடைக்கும். ஆனால் ஆண்டவரிடத்தில் கிருபைக்கு அளவே இல்லை. கிருபைகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள், கிருபாசனத்திலிருந்து கிருபை மேல் கிருபையைத் தருவார்; நிச்சயமாக கிருபைகளைத் தருவார். அளவில்லாத கிருபையைக் கேளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும் அவரிடம் கிருபைக்கு பஞ்சம் இல்லை; ஆகவே கிருபை பெற முந்திக் கொள்ளுங்கள். (யோ 1/16)

**24. 'சமாதானத்தின் உடன்படிக்கை' என்றால் என்ன?**

'மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னை விட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும்". (ஏசாயா. 54/10)

மலைகள் விலகுகிறது போன்ற சூழ்நிலைகள், பெரிய ஆபத்துக்கள் வந்தாலும் அவர் கிருபையை விலக்க மாட்டார். **என்னென்ன பிரச்சனைகள் வந்தாலும் உங்களை விட்டு சமாதானம் எடுபடாது.** சமாதானக் கர்த்தர் அவர் சமாதான பிரபு. அளவில்லாத சமாதானத்தை உங்களுக்குத் தருவேன் என அவர் வாக்குப்

பண்ணுகிறார். சமாதானத்தை நதி போலத் தருவார். பரிசுத்த ஆவியைப் பெறுங்கள். அவர் ஆவிக்கு அளவே இல்லை. அளவில்லாமல் ஆவியை ஆண்டவரிடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். இவைகளைப் பெற நாம் காத்திருக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு காத்திருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு கிருபையை, சமாதானத்தை, பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ள முடியும். ஆண்டவர் உங்களைத் தம் ஆவியால், கிருபையால் சமாதானத்தால் நிரப்ப வல்லவராக இருக்கிறார்.

**25. 'சோதனைக் கால உடன்படிக்கை' என்றால் என்ன?**

கடைசிக் காலத்தில் பூச்சக்கரம் மீதெங்கும் வரப் போகிற சோதனைக் காலத்திற்கு தப்புவிக்கும் படி நானும் உன்னைக் காப்பேன் (வெளி 3/10). வானவில் உடன்படிக்கையின்படி இனி **முழு உலகத்தையும்** தேவன் வெள்ளத்தால் அழிக்க மாட்டார். அதே சமயம் அநேக இடங்களில் வெள்ளம் வருகிறது; பயங்கரமான காற்று வீசுகிறது; அழிவு வருகிறது; அவர் உடன்படிக்கை பண்ணினது உண்மைதான். நீ அந்த உடன்படிக்கைக்கு உட்பட்டு இருந்தால் உன்னை நிச்சயமாக காப்பார்.

இலங்கையில் வெள்ளத்தால் அழிவு வந்தது. இந்தியாவிடம் அரிசி கேட்டது; இந்தியாவிலும் அதிக மழையால் அழிவு வந்தது. இங்கேயும் ஆகாரத்திற்கு பஞ்சம் வருகிற சூழ்நிலை இருக்கிறது. பர்மாவில் பெரிய புயல் காற்று வந்தது; சுமார் 2 லட்சம் பேர் மரித்துப் போய் விட்டார்கள்; எத்தனையோ வீடுகள் அழிந்தன்; பயிர்கள், நிலங்கள் அழிந்தன ; அங்கேயும் பஞ்சம் வருகிற சூழ்நிலை வந்துள்ளது. சீனாவில் பெரிய பூமியதிர்ச்சி வந்தது. 50 லட்சம் வீடுகள் அழிந்தது. அமெரிக்காவின் பொருளாதாரம் வரவர இறங்கி வருகிறது. அமெரிக்காவிடமிருந்து நாம் வாங்க முடியும் என எதிர் பார்க்க முடியாது. இந்தியர்கள் அதிகமாக சாப்பிடுகிறார்கள் என அமெரிக்கர்கள் சொல்கின்றார்கள்; அவர்கள் தங்களுக்குத் தேவையான அரிசிக்காக சீனாவையும், இந்தியாவையும் தான் நம்பியிருக்கிறார்கள். ஆள் பெலத்தில் இந்தியாவும், சீனாவும் பெரிதாக இருக்கிறது. பணபெலத்தில் மற்ற நாடுகள் பெரிதாக இருக்கலாம். சில அரபு நாடுகளில் பெட்ரோயம் தான் உண்டு. ஆள்பலம் இந்தியாவிலும் சீனாவிலும் இருக்கிறபடியால் ஒன்றும் இல்லாவிட்டாலும் பயிரிட்டாவது சாப்பிடக் கூடிய வழி இந்த 2 நாடுகளிலும் உண்டு. ஆள்பலம் இருந்தாலும் பஞ்சம் போன்ற சூழ்நிலைகள் வரும்போது ஒன்றும் செய்யமுடியாது; வெறும் பணத்தை சாப்பிட முடியாது.

இப்பொழுது சோதனைக் காலம். ஒரு நாடு மற்ற நாட்டிற்கு உதவி செய்ய முடியாத சூழ்நிலை உலக முழுவதும் வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் உங்களுக்கு உதவியாக ஆண்டவர் மட்டுமே இருக்க

முடியும். அவர் நமக்கு உதவியாக இல்லாத கட்டத்திலே நாம் தப்பிக் கொள்ளவே முடியாது. ஆண்டவரை சொந்தமாக்கிக் கொள்வீர் களானால் அவர் உங்களைச் சோதனைக் காலத்திற்குத் தப்புவிப்பார். (கடைசிக் கால சோதனை)

**26. 'பொருத்தனை உடன்படிக்கை' என்றால் என்ன?**

சங் 50/14,15 படியுங்கள். இது ஆபத்துக் காலத்தில் நாம் பண்ணும் பொருத்தனையாகும். இதன் மூலம் நாம் ஆண்டவரோடு உடன்படிக்கை பண்ணுகிறோம். அன்னாள் 'சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பேன்' என பொருத்தனைப் பண்ணினாள். அவள் ஜெபம் கேட்கப்பட்டது. மலடியாயிருந்த அன்னாளுக்கு 5 பிள்ளைகள் சாமுவேலுக்கு பிறகு பிறந்தார்கள். பொருத்தனை பண்ணுவது பெரிய காரியமல்ல; அதை நிறைவேற்ற வேண்டும். ஆபத்திருந்து விடுதலை பெற்ற பிறகு நாம் பொருத்தனையை நிறைவேற்றாவிட்டால் அது பாவமாகும். நீ அதை மறந்தாலும் ஆண்டவர் அதை மறப்பதில்லை.

அன்னாள் தான் பண்ணின பொருத்தனையை நிறைவேற்றி அந்த பிள்ளையை தேவாலயத்திலே கொண்டு போய் விட்டாள். சாமுவேல் தேவாலயத்திலே வளர்ந்தான். அவன் கர்த்தருக்கு பணிவிடை செய்தான் (I சாமு 3/1). இது அன்னாளுடைய ஒப்புக் கொடுத்தல்; நீங்கள் ஒப்புக் கொடுத்தும் உங்கள் பிள்ளைகள் ஒப்புக் கொடுக்காமல் இருக்கலாம். ஆனாலும் ஆண்டவர் உன் பொருத்தனையின்படி அதை செயல்படுத்துவார். நீங்கள் பண்ணுகிற பொருத்தனை உங்கள் பிள்ளைகளுக்குத் தெரியாமல் இருக்கலாம்; ஆனாலும் அந்த பொருத்தனையின்படி ஆண்டவர் நடத்துவார்; கிரியை செய்வார்.

நீங்கள் பொருத்தனை பண்ணி விட்டு அடுத்த நேரம் யோசித்துக் கொண்டிருப்பீர்களானால் உங்கள் நினைவுகளின்படியெல்லாம் நடக்காது. அவர் தம் சித்தத்தின்படி நடத்துவார்; நீ ஒரு வேளை மாறலாம்; ஆனால் அவர் ஒருபோதும் மாறமாட்டார்.

நியா 11/31ல் யெப்தா பண்ணின பொருத்தனையைப் பார்க்கிறோம். எனக்கு எதிர் வருவது எதுவோ அது கர்த்தருக்குரியது என யெப்தா பொருத்தனை பண்ணினான். அவன் குமாரத்தி தம்புரு வாசித்து அவனுக்கு எதிர்கொண்டு வந்தாள். பொருத்தனையின்படி அவளைக் கர்த்தருக்கென்று முழுமையாக ஒப்புக் கொடுத்தான்; தகனபலியாக வெட்டி பலி செலுத்தவில்லை; அவள் திருமணம் செய்யாமல் கர்த்தருக்கென்று வாழ்ந்தாள்.

கர்த்தரை நோக்கிச் சொன்ன பொருத்தனையை மகளும் கேட்டாள்; அந்த பொருத்தனைக்கு இசைந்து வந்தாள்; அவள் எதிர்த்து

நிற்கவில்லை; "உம்முடைய வாயிருந்து புறப்பட்டபடியே எனக்குச் செய்யும்" என சொன்னாள். தன் கன்னிமையினிமித்தம் மலைகளிலே துக்கம் கொண்டாடச் சென்றாள். சாகும் வரை அவள் கன்னியாக இருந்து கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்கப்பட்டாள். அவன் பண்ணியிருந்த பொருத்தனையின்படி அவளுக்குச் செய்தான்.

பொருத்தனை பண்ணினால் அதை நிறைவேற்ற கவனமாக இருக்க வேண்டும். அன்னாள் பண்ணின பொருத்தனைக்கு சாமுவேல் இசைந்து வந்தான். தேவன் தமது அனாதி தீர்மானத்தின்படி சில வேளைகளில் சில சூழ்நிலைகளை உருவாக்கலாம். அவர் சித்தப்படியுள்ள பொருத்தனைக்குத் தடை வராது. தடைகள் வந்தாலும் அவைகள் மேற்கொள்ள முடியாது. முடிவிலே அவர் பரிபூரண சித்தம் நடக்கும். "உம்முடைய சித்தத்தின்படி எனக்கு ஆகக்கடவது" என ஒப்புக் கொடு.

நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுடைய வீடாகும் என யாக்கோபு பொருத்தனைப் பண்ணினான்; அதன்படி பபீடம் கட்டினான். (ஆதி 31/13); நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு பொருத்தனை பண்ணினால் அதை செலுத்தத் தாமதம் செய்யாதே; கர்த்தர் அதை நிச்சயமாக உன் கையிலே கேட்பார். அது உனக்கு பாவமாகும். (உபா. 23/22). உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் சொன்ன உற்சாக பயை செலுத்தித் தீர்ப்பாயாக. பெற்றோர் செய்த பொருத்தனைகளில் பிள்ளைகளுக்கு பங்கு உண்டு; பிள்ளைகளிடம் தாங்கள் பண்ணின பொருத்தனைகளைக் குறித்து பெற்றோர் சொல்ல வேண்டும். அது தேவசித்தமானால் நிறைவேறப் பிரயாசப்படு. உன்னை அதற்கு ஒப்புக்கொடு என பெற்றோர் சொல்ல வேண்டும். அப்போது ஆண்டவர் தம் சித்தப்படி நடத்துவார்

உன் பொருத்தனையின்படி ஆண்டவர் காரியங்களை அமைத்துக் கொடுக்கும்படி விசுவாசித்து ஜெபி. பொருத்தனை பண்ணிய பின் மாறுபாடாக நடந்தால் அவரும் மாறுபடுவார். அன்னாள் கேட்டது ஒரு குழந்தை மட்டுமே; அவள் பெற்றது இன்னும் 5 குழந்தைகள்; அதைப்போல ஆண்டவர் அளவில்லாமல் ஆசீர்வதிக்க முடியும். உன் பொருத்தனைகளையெல்லாம் அவர் கணக்கில் வைத்திருப்பார். நீ விரும்பாத மேன்மையான காரியங்களை உன் பொருத்தனையின்படி செய்வார்; பொருத்தனையை நிறைவேற்றப் பிரயாசப்படு; உன் பொருத்தனையை அடுத்தவர் தலையில் வைக்காதே; நீ பண்ணின பொருத்தனையை நிறைவேற்ற ஆண்டவர் உதவும்படி விசுவாசிகளை ஜெபிக்கச் சொல்லலாம். நீ இக்கட்டில் பண்ணின பொருத்தனையை செலுத்தினாயா? (சங் 66/14)

## 27. யார் ஞானி?

ஞானம் என்பது கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ந்து அவருக்குப் பயப்படுவதாகும். என்னென்ன fashion-ல் துணி, நகை, அலங்காரங்கள் வருகிறது என்பதைக் குறித்த அறிவு அல்ல, ஆண்டவரைக் குறித்த அறிவில் நாளுக்கு நாள் வளர வேண்டும். ஆண்டவரை முழுமையுமாக அறிந்தவர் பிதாவாகிய தேவன் மட்டுமே. பிதா தவிர வேறொருவனும் குமாரனை பூரணமாய் அறியான், நாம் வேதத்தை வாசித்து கொஞ்சம் தான் அவரைப் பற்றி அறிய முடியும். வேதம் ஒரு பெரிய கடல், அதற்கு முடிவு இல்லை; கர்த்தரை அறிகிற அறிவுக்கும் முடிவு இல்லை. ஒரு சிலர் Bible college-ல் படித்திருக்கலாம். ஆனால் அதைக் கொண்டு முழுமையாக நீ இயேசுவை அறிந்திட முடியாது; அறிந்து கொண்டே இருக்கணும்; தெரிந்து கொண்டே இருக்கணும்; அதற்காக எதையும் இழக்கவும் ஆயத்தமாக இருக்கணும். "கர்த்தரை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்" என பி3/8 கூறுகிறது.

ஆண்டவரைப் பற்றி அறிய இன்னும் ஆசை வர வேண்டும். அவரை அறிகிற அறிவைப் பெரிதாக எண்ணினால் அதைத் தருவார். உன் வீட்டையோ, பாக்கெட்டையோ, வயிறையோ பெரிதாக நினைக்காதே, இவைகளை அற்பமாக எண்ணி, ஞானத்தை புதையலைப் போலத் தேடு. நீ படித்தவுடன் உன்னை பெரிய ஞானி என்று எண்ணாதே. எத்தனையோ degree படித்தவர்களிடம் Bible ஐக் கொடுத்து ஒரு வசனத்திற்கு விளக்கம் கேட்டால் அவர்களால் சொல்ல முடியாது.

ஞானம் எங்கே என்று சொல் நீ அதைத் தேடிப் பிடிக்க வேண்டும்; அதைக் கற்றுக் கொள்ள வேண்டும்; அதைத் தியானிக்க வேண்டும்.

1. தேவனை அறிகிற அறிவு - கொலோ 1/10
2. சத்தியத்தை அறிகிற அறிவு - I தீ 2/4
3. அவர் சித்தம் அறிகிற அறிவு - எபேசி 5/17
4. தேவ இரகசியங்களை அறிகிற அறிவு - யோபு 29/4

இந்த 4 ஞானமும் உள்ளவன் தான் ஞானி

## 28. ஞானத்தைப் பெற என்ன செய்ய வேண்டும்?

மேற்கூறிய 4 அறிவும் பெற வேதபுத்தகத்தை கசடறக் கற்க வேண்டும்; சபையில் ஊழியர் மூலம் தேவன் பேசுவதற்குக் காது கொடுக்க வேண்டும். தேவன் தான் நமக்கு ஞானத்தைப் போதிக்கிறவர். "ஞானத்தைப் போதிக்கும் வசனம்" என்ற ஆவியின் வரம் உண்டு. (I கொரி 12/8) இந்த வரத்தின் மூலம் ஆண்டவர் நமக்கு ஞானத்தைப்

போதிக்கிறார். ஞானத்தை முழுவதுமாக பெற்று விட்டோம் என்றல்ல, ஞானத்தைப் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.

நாம் வாஞ்சையோடு தேடினால் ஞானத்தைத் தருவார். வெள்ளியைப் பார்க்கிலும், பசும் பொன்னைப் பார்க்கிலும் ஞானத்தை பெரிதாக எண்ணித் தேடுபவர்களுக்கு ஞானத்தைக் கொடுப்பார். முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே நலம்.

ஞானத்தைப் பெற அடிப்படையானது கர்த்தருக்குப் பயப்படும் பயம். யாருக்கு கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லையோ அவர்களுக்கும் ஞானத்திற்கும் சம்பந்தமே இல்லை. இயேசுவுக்கு முதலாவது பயப்பட வேண்டும்; அவரை கனம் பண்ண வேண்டும். இந்த இரண்டும் இல்லாவிட்டால் ஞானத்தைப் பெற முடியாது. சாலமோனுக்கு அதிகமான ஞானத்தை தேவன் கொடுத்தார். அவன் ஞானத்தைக் கேட்க சேபா நாட்டு இளவரசி தூரதேசத்திருந்து வந்தாள். சாலமோனிலும் பெரியவராகிய இயேசு சபையிலே பேசும்போது செவிசாய்க்க வேண்டும். காதுள்ளவன் கேட்கக் கடவன்; கேட்கும்போது நமக்கு ஞானம் உண்டாகும். ஒரு வாசலை தேவன் திறந்தே வைத்திருக்கிறார். அது தான் "காது" என்ற வாசல். ஆகவே சாக்குப் போக்கு சொல்ல முடியாது. ஆவியானவர் சபைகளுக்கு சொல்கிறதைத் காதுள்ளவன் கேட்கக்கடவன் (வெளி 2/7). கண்களுள்ளவன் வேதத்தைத் திறந்து வாசிக்க வேண்டும். கேட்கிற மக்களாக இருக்க வேண்டும்; செவிட்டு விரியனைப் போல இருந்தால் வசனம் கிரியை செய்யாது.

பெற்ற ஞானத்தில் நாளுக்கு நாள் வளர வேண்டும். (லூக். 2/.52)

**29. கர்த்தருக்குப் பிரியமான கனிகளைக் கொடுக்க என்ன செய்ய வேண்டும்?**

மேன்மையான காரியத்தை செய்யத்தக்கதாக ஆண்டவரை அண்டிக்கொள். உன் சுயபுத்தியின் மேல் சாயாதே; ஆண்டவரை மாத்திரம் சார்ந்திரு. அவர் சித்தத்திற்கு இசைந்து உன்னை ஒப்புக்கொடு. அப்போது உன்னைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்வார். கர்த்தர் செய்ய வல்லவர், போதுமானவர், நாம் அதற்கு இசைந்து வந்தால் தான் அவர் செய்வார்.

பணிவு வேண்டும்; எளிமை வேண்டும்; கர்த்தருக்கு முன்பாக பணிந்திரு; உன்னைத் தாழ்த்து, 'பணிவு' என்ற பாடத்தை வாழ்ந்து அவர் காட்டிச் சென்றார். 'இதோ நான் ஆண்டவருக்கு அடிமை' என பணிவோடு மரியாள் சொன்னாள். தன்னை அடிமை என்று தாழ்த்தினாள். யோவான் ஸ்நானகனும் 'அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரன் அல்ல' என தன்னைத்

தாழ்த்தினான். ஆண்டவர் இந்த உலகில் மனுஷனாக வந்து மனுஷரின் கால்களைக் கழுவினார். உங்கள் வாழ்வில் பணிவுள்ளவர்களாக இருந்தால் ஆண்டவர் உங்களோடு இருப்பார். மத் 5/3ல் ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று கூறப்பட்டுள்ளது. எளிமை, பணிவு, தாழ்மை உள்ளவர்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பார்கள்.

உலகம் சொல்லும் 'பணத்தை சம்பாதி' என்று. ஆனால் 'கர்த்தர் சொல்கிறார் ஞானத்தைச் சம்பாதி' என்று. யார் ஞானத்தை மேன்மைப்படுத்தி அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களோ அவர்களை ஆண்டவரே மேன்மைப் படுத்துவார்; ஆகவே அதிக கனிகளைக் கொடுக்க ஞானத்தை மேன்மைப்படுத்து.

**30. ஓய்வுநாளில் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்ய கூடாது?**
(ஏசாயா 58/13,14)

i) யாக்கோபின் சுதந்தரத்தால் உன்னை அவர் போஷிக்க வேண்டுமானால் ஓய்வுநாளில் உனக்கு இஷ்டமானதை செய்ய இடம் கொடாதே.

ii) உன் காலை விலக்கு → ஞாயிற்றுக்கிழமைகளில் தூரத்திற்கு சென்றுவர பயணத்திலே உன் நேரம் செலவழிந்து போகும். உன் நண்பனைப் போய் பார்க்க இன்னொரு நாளை ஒதுக்கு.

iii) உன் வழிகளின் படி நடவாதே - எத்தனையோ வேலைகள் உங்களுக்கு இருக்கலாம் ஆனாலும் ஞாயிற்றுக்கிழமையை வேலைநாளாக மாற்றாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. 6 நாளும் வேலைக்குப் போகிறீர்கள்; 7ம் நாளையும் வேலை நாளாக்கி அவ்வளவு துணிகளையும் துவைத்து iron பண்ணினால் ஆண்டவரோடு செலவழிக்கும் நேரம் குறைந்து போகும். ஓய்வு நாளில் எவ்வளவு நேரம் ஆண்டவரோடு செலவழிக்க முடியுமோ அவ்வளவு நேரம் செலவழிக்க வேண்டும். அன்றைக்கு Simple ஆக சாப்பாடு செய்து சாப்பிட வேண்டும். ஞாயிற்றுக் கிழமைகளில் 16 கூட்டு செய்து சாப்பிடக் கூடாது.

iv) சொந்தப் பேச்சைப் பேசாதே - கதை பேசி நேரத்தை வீணாக்காமல் தேவனோடு அதிக நேரம் பேசுங்கள். நீ மனுஷனோடு அதிகமாக பேசுவாயானால் ஆண்டவரோடு பேசும் நேரம் குறைந்து போகும். சிலர் காலை முதல் மாலை வரைக்கும் மனுஷனோடு பேச நேரம் செலவிட ரெடி. ஆனால் ஆண்டவரோடு பேச நேரம் இல்லை; அப்படியானால் யாக்கோபின் சுதந்தரம் உனக்குக் கிடைக்காது.

v) ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாள் என எண்ணு - அப்போது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்; பூமியின் உயர்ந்த இடங்களில்

உன்னை ஏறியிருக்கப் பண்ணி, உயர்ந்த ஸ்தானத்தைத் தருவார். அநேகருக்கு உங்களை பிரயோஜனமுள்ளவர்களாக ஆக்குவார்; ஆசீர்வாதமாய் இருப்பீர்கள்.

**31. 'யாக்கோபின் சுதந்தரம்' என்றால் என்ன?**

ஆதி 28/12-22 வாசித்துப் பாருங்கள்.

1. யாக்கோபு படுத்திருக்கும் போது தேவதூதர்கள் பரலோகத்திலிருந்து ஏறுகிறதும் இறங்குகிறதையும் கண்டான். யோவான் 1/51ல் இயேசு இவ்விதமாக கூறியுள்ளார். "வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இது முதல் காண்பீர்கள்." இப்படிப் பட்ட சுதந்தரம் உங்களுக்கு கிடைக்குமானால் நீங்கள் ஜெபித்தவுடன் பதில் கிடைக்கும். உன் கூப்பிடுதலுக்கு உடனே பதில் கொடுப்பார். 'அவர்கள் பேசும் போதே நான் கேட்பேன்' என ஏசா 65/24 கூறுகிறது. ஒரு சிறு காரியத்திற்காக அந்தரங்கமாக நாம் ஜெபிக்கும் போது உடனே ஆண்டவர் கேட்பார். ஏறுகிற தூதர்கள் உன் ஜெபத்தை ஆண்டவரிடம் கொண்டுப் போவார்கள். இறங்குகிற தூதர்கள் உன் ஜெபத்திற்கு பதிலைக் கொண்டு வருவார்கள்.

2. வானம் திறக்கப்படும் - நீ இருக்கிற இடத்தின் மேலுள்ள வானம் உனக்குத் திறக்கப்படும்; மத் 3/16ல் இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி அவர் மேல் வந்து அமர்ந்தார். நீ எங்கே போனாலும் தேவ ஆவி உன் மேல் வந்து அசைவாடிக் கொண்டிருப்பார். தேவ பிரசன்னம் உன்மேல் வந்து உன்னை மூடும்; ஆவியானவர் உங்களை ஆளுகை செய்து, ஆட்கொண்டு, மூடி, தாங்கி, வழி நடத்துவார். எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள். ஆவியானவர் ஆளுகை முழுவதுமாக இருக்கும் போது சாத்தான் நம்மைத் தொட முடியாது. சத்துரு கண்களுக்கு ஆவியானவர் நம்மை மறைப்பார். இது தான் வானம் திறக்கப்படும் அனுபவம்.

3. பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கப் பண்ணுவார் (ஏசாயா 58/14). அநேக ஜனங்களுக்கு பிரயோஜனமுள்ளவர்களாக ஆண்டவர் உயர்த்துவார்

4. உன் சந்ததி பூமியின் தூளைப் போல இருக்கும் (ஆதி 28/14). இந்த வாக்குத்தத்தத்தின்படி அநேக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணும் கிருபையை ஆண்டவர் தருவார். விசேஷித்த கிருபைகள், வரங்கள், ஞானங்கள் தருவார்.

5. பூமியின் வம்சங்களெல்லாம் உன் சந்ததிக்குள் ஆசீர்வதிக்கப்படும்

(ஆதி 28/14). நீங்கள் ஜெபிக்கும் போது உங்கள் மூலம் பிறருக்கு ஆசீர்வாதம் கிடைக்கப்பண்ணுவார். கர்த்தர் நாமம் மகிமைப்படும்படி அற்புதம், அதிசயம் செய்வார்.

6. 'நான் உன்னோடு இருப்பேன்' (ஆதி 28/15)
உனக்குத் துணையாய் ஆண்டவர் இருப்பார்; எப்போதும் உன்னோடு இருந்து நடத்துவார்.

7. நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காப்பேன் (ஆதி28/15)

8. நான் உன்னைக் கைவிடுவது இல்லை (ஆதி 28/15)
அவர் உன்னை கைவிடவும் மாட்டார்; உன்னை விட்டு விலகவும் மாட்டார்.

**32. சத்ருவின் சகல வல்லமைகளையும் மேற்கொள்ள என்ன செய்ய வேண்டும்?**

லூக் 10/19 ல் சாத்தானின் சகல வல்லமைகளையும் மேற்கொள்ள நான் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன். ஒன்றும் உங்களை சேதப்படுத்தாது என எழுதப்பட்டுள்ளது.

i) ஆண்டவரை நெருங்க வேண்டும். குஷ்டரோகியை ஆண்டவர் தொட்டவுடன் வல்லமை அவரிடமிருந்து புறப்பட்டுச் சென்று குஷ்டம் மாறியது. நாமும் அப்படியே விசுவாசித்து நீர் என்னைத் தொடும் என ஜெபிக்கணும். அவர் தொட்ட யாவரும் சொஸ்த மானார்கள். அவரைத் தொட்டவர்களும் சொஸ்தமானார்கள். பெரும்பாடுள்ள ஸ்தீரி இயேசுவைத் தொட்டாள். வல்லமை அவள் சரீரத்தில் பாய்ந்தது, சுகம் பெற்றாள். அதே சமயம் குஷ்டரோகியை இயேசு தொட்டார். எவ்வளவுக்கெவ்வளவு ஆண்டவரை ஜெபத்தில் நெருங்குகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அவரால் வரும் விடுதலை நமக்குக் கிடைக்கும்.

எந்த மனுஷனையும் பிரகாசிக்கப் பண்ணுகிற மெய்யான ஒளி இயேசு. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. அவரிடமிருந்து விடுதலையும், மேன்மையானவைகளையும் பெற்றுக் கொள். மோசே மலையில் போய் ஜெபித்தான். அப்போது அவன் முகம் பிரகாசம் அடைந்தது. எவ்வளவுக்கெவ்வளவு ஆண்டவரோடு ஐக்கியப் படுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு எல்லாவற்றிலும் பிரகாசம் உண்டாகும்; அவரைக்கிட்டிச் சேர்வதால் பாவத்தின் மேல், சாபத்தின் மேல், நிந்தையின் மேல், கட்டுகளின் மேல் விடுதலை பெற முடியும்.

பெரும்பாடுள்ள ஸ்தீரி விசுவாசத்தோடு இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். சிலர் விசுவாசத்தோடு ஜெபிக்கிறார்கள்; விசுவாசத்தோடு ஜெபிக்கிறவர்களுக்கு விடுதலை கிடைக்கும். ஆண்டவரின் வஸ்திரத்தை எத்தனையோ பேர்கள்

தொட்டிருக்கலாம்; ஆனால் பெரும்பாடுள்ள ஸ்தீரியோ விசுவாசத்தோடு தொட்டாள். ஆகவே ஆண்டவரிடத்திருந்து விடுதலை பெற விசுவாசத்தோடு அவரை நெருங்க வேண்டும்.

ii) அவர் சர்வ வல்லமையுள்ள தேவனென்று அறிக்கை பண்ணுங்கள்.

iii) ஆண்டவருக்கு மாத்திரம் பயப்படுங்கள்; பிசாசுக்கு பயப்படாதிருங்கள். "அப்பாலே போ சாத்தானே; உனக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" என சாத்தானை எதிர்த்து நில்லுங்கள். சாத்தானின் வல்லமையை விட இயேசுவின் வல்லமை பெரியது என விசுவாசியுங்கள். விசுவாசத்தோடு எதிர்த்து நிற்கும் போது சாத்தான் ஓடிப்போவான்.

iv) உபவாசிக்கும் போது ஆண்டவரை இன்னும் நெருங்க முடியும். சாத்தான் தொல்லையில் இருப்பவர்கள் இன்னும் அதிகமாக உபவாசிக்க வேண்டும். வயிறு காலியாக இருக்கும் போதுதான் நன்றாக ஜெபிக்க ஆர்வம் வரும்; உறக்கமும் வராது. ஆகவே தான் ஆண்டவர் அதிகாலையில் நம்மை ஜெபிக்கச் சொல்கிறார். "சகாயம் கிடைக்கும் காலத்திலே பக்தியுள்ளவன் எவனும் என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவான். அப்போது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது."

v) பிசாசு தொல்லையில் இருப்பவர்கள் ஆண்டவரை அதிகாலையில் அதிகமாகத் தேட வேண்டும். இயேசு 4ம் ஜாமத்திலே (காலை 3-6 மணி) கடலின் மேல் நடந்தார். ஆகவே நாமும் இந்த நேரத்தில் ஆண்டவரைத் தேடும் போது இன்னும் விடுதலை உண்டாகும். மனுஷகுமாரன் உங்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும்; அப்போது உபவாசிப்பார்கள் என இயேசு கூறினார்.

vi) சபை கூடி ஆராதிப்பதை விட்டுவிட கூடாது

- ஒருவன் 1000 பேரைத் துரத்த முடியும்.
- 2 பேர் 10,000 பேர்கள்
- 6 பேர் 10 கோடி பேர்கள்
- 8 பேர் 1,000 கோடி பேர்கள்
- 12 பேர் கோடாகோடி பேர்கள்

கொஞ்சம் பேரைக் கொண்டோ அநேகம் பேரைக் கொண்டோ இரட்சிக்க கர்த்தருக்குத் தடையில்லை; 12 பேர் சேர்ந்து ஜெபித்தால் கோடா கோடி பிசாசுகளையும் துரத்த முடியும்.

vii) ஒரு மனதோடு ஜெபியுங்கள்

2 அல்லது 3 பேர் கூடி ஒருமனதோடு ஜெபிக்கும் போது அந்த ஜெபம் வல்லமையாக இருக்கும். குடும்ப ஜெபம் செய்யுங்கள்.

viii) சாத்தான் வசனத்துக்குப் பயப்படுவான். ஆகவே கர்த்தருடைய வசனங்களை வாயைத் திறந்து சத்தமாய் வாசிக்கும் போது அது

கர்த்தரின் சத்தமாய் மாறுகிறது. கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது; மகத்துவமுள்ளது. அது கேதுரு மரங்களை முறிக்கும். கர்த்தரின் சத்தம் எதையெல்லாம் செய்யும் என்பதை சங் 29ஐ படித்து அறியுங்கள்.

ix) "இயேசுவின் இரத்தம் ஜெயம்" என அறிக்கைப்பண்ணி ஜெபி யுங்கள்.

x) ஞானஸ்நானம் பெற்று இராப்போஜன ஐக்கியத்தில் பங்கெடுங்கள். அவர் மாம்சம் புசித்து, அவர் இரத்தத்தில் பானம் பண்ணுபவர் களுக்கு நித்திய ஜீவன் உண்டு; அந்த ஜீவன் நமக்குள் ஒளியாய் இருக்கும்; ஜீவன் இருக்கும் இடத்தில் வெளிச்சம் வரும்; வெளிச்சம் வரும் இடத்தில் சாத்தான் ஓடிப் போவான்.

xi) பரிசுத்த ஆவியைப் பெற்று அபிஷேகத்தினால் ஜெபிக்கும் போது இன்னும் விடுதலை உண்டாகும். அபிஷேகத்தினால் சாத்தானின் நுகம் முறியும்.

## தற்பரிசோதனைக் கேள்விகள்

இந்தக் கேள்விகளை உங்களிடமே கேட்டு மார்க் போட்டுப் பாருங்கள். ஆம் அல்லது இல்லை என்று அருகில் எழுதுங்கள்.

1. ஆண்டவர் மேல் ஆதியில் இருந்த அன்பு உனக்கு குறைவுபட்டுள்ளதா? எரே 2/2
2. மாயையைப் பின்பற்றுகிறாயா? எரே 2/5
3. வீணானவைகளைப் பின்பற்றுகிறாயா? எரே 2/7
4. உனக்கு மகிமையாக இருப்பது எது? எரே 2/11
5. வெடிப்புள்ள தொட்டிகளை உனக்கு வெட்டிக் கொண்டாயா? தேவனை விட்டுவிட்டு உன் சுயவழியில் செல்லுகிறாயா? எரே 2/13
6. கர்த்தரைப் பற்றும் பயம் உனக்கு உண்டா? எரே 2/19
7. தேவன் உன்னை நற்குலத் திராட்சைச் செடியாக நாட்டினாரே, ஆகாத கொடியாய் மாறி விட்டாயா? எரே 2/21
8. உன் அக்கிரமம் கறை போல படிந்துள்ளதா? எரே 2/22
9. உன் ஜீவியம் தாறுமாறாய் இருக்கிறதா? எரே 2/23
10. நீ ஆண்டவரை அதிகமாக நேசிக்கிறாயா? எரே 2/25
11. தேவன் பேசும்போது செவிகொடுக்கிறாயா? அல்லது முதுகைக் காட்டுகிறாயா? எரே 2/27
12. தேவனோடு வழக்காடுகிறாயா? அவருக்குத் துரோகம் செய்கிறாயா? எரே 2/29
13. சிட்சையை ஏற்றுக்கொண்டாயா அல்லது புறக்கணித்துத் தள்ளி விட்டாயா? எரே 2/30
14. எண்ணி முடியாத நாட்களாக வேதபுத்தகத்தை வாசிக்க மறந்து போனாயா? எரே 2/32
15. நான் ஒரு பாவமும் செய்யவில்லை என நீ சொல்லுகிறாயா? எரே 2/33
16. உன் நம்பிக்கை உலகமா? யாரை நீ நம்பியிருக்கிறாய்? எரே 2/37

17. விக்கிரகாராதனையும், விபச்சார பாவமும் உன்னில் உண்டா? எரே 3/9; 13/27
18. இருதயத்தின் இச்சையின்படி நடக்கின்றாயா? எரே 3/17
19. ஆண்டவருக்குத் துரோகம் செய்கிறாயா? எரே 3/20
20. உன் வழி மாறுபாடானதாக இருக்கிறதா? நீ கர்த்தரை மறந்து போயிருக்கிறாயா? எரே 3/21
21. முள்ளுகளுக்குள் விதைக்கிறாயா? எரே 4/3
22. தரிசுநிலம் பண்படுத்தப்பட்டுள்ளதா? எரே 4/3
23. உன் கிரியைகள் பொல்லாதவைகளாக இருக்கிறதா? எரே 4/4
24. உன் இருதயம் விருத்தசேதனம் பண்ணப்பட்டிருக்கிறதா? எரே 4/4
25. அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்தில் இருக்கிறதா? எரே 4/14
26. வீணாய் உன்னை சிங்காரிக்கின்றாயா? எரே 4/30
27. சத்தியத்தைத் தேடுகிறாயா? எரே 5/1
28. தேவனோடுள்ள ஐக்கியத்தை விட்டுவிட்டாயா? எரே 5/5
29. முரட்டாட்டமும் கலகமுமான இருதயம் உண்டா? எரே 5/23
30. கபடம் உன்னில் உண்டா? எரே 5/27
31. திக்கற்றவனின் வழக்கை விசாரிக்கிறாயா? எரே 5/28
32. உன் செவி விருத்தசேதனமடைந்துள்ளதா? எரே 6/10
33. கர்த்தருடைய வசனத்தின் மேல் விருப்பமில்லையா? எரே 6/10
34. செய்த குற்றத்திற்காக மனஸ்தாபப்படுகிறாயா? எரே 8/6
35. பொருளாசை உன்னில் உண்டா? எரே 8/10
36. புறஜாதிகளின் மார்க்கத்தின்படி செய்கிறாயா? எரே 10/2
37. கர்த்தர் கற்பிக்கிறபடியே அவர் சத்தம் கேட்டு எல்லா காரியங்களையும் செய்கிறாயா? எரே 11/3
38. முன்னோர்களின் அக்கிரமத்தைச் செய்கிறாயா? எரே 11/10
39. கர்த்தர் வார்த்தையைக் கேட்க உன் இருதயம் மறுத்து, கடினமாகி உள்ளதா? எரே 13/10
40. கர்த்தருக்கு மகிமையை செலுத்துகிறாயா? எரே 13/16
41. பெருமை குணம் உன்னில் உண்டா? எரே 13/17
42. சிறைப்பட்டுப் போனவர்களுக்காக அழுது ஜெபிக்கிறாயா? எரே 13/17
43. தீமை செய்ய பழகியிருக்கிறாயா? அல்லது நன்மை செய்கிறாயா? எரே 13/23
44. ஆண்டவரை மறந்து பொய்யை நம்புகிறாயா? எரே 13/25
45. கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போனாயா? எரே 15/6
46. மனுஷன் மேல் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறாயா? எரே 17/5
47. அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறாயா? எரே 17/11
48. ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிறாயா? எரே 17/22
49. புத்தியை ஏற்றுக் கொள்கிறாயா? அல்லது கழுத்தைக் கடினப் படுத்துகிறாயா? எரே 17/23
50. கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாக கலகம் பண்ணி அவர்களுக்குத் துரோகம் செய்கிறாயா? எரே 20/2

உன் **ஆவிக்குரிய** அழகைப்பார். அதுவே கர்த்தர் பார்வைக்கு அழகு

## உலகமும் ஆளுகையும்

1. போ□த்திரத் தயாரிப்புகள் பிடிபடுவதாக.
2. ஒரிஸ்ஸாவில் மாவோயிஸ்ட் தீவிரவாதங்கள் கட்டி போடப் படுவதாக.
3. தனித் தெலுங்கு தேசம், தனித்தமிழ்நாடு போன்ற கொள்கைகள் கைவிடப்படுவதாக.
4. இந்தியா வங்கதேசம் இடையில் நட்பு வளர்வதாக.
5. பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், கேஸ் விலைகள் குறைக்கப் படுவதாக.
6. தற்கொலைப் படைகளின் பின்னணிகள் பிடிப்படுவதாக.
7. பெங்களூர், அகமதாபாத், மும்பை இடங்களில் நடந்த குண்டு வெடிப்புகளின் பின்னணிகள் பிடிபடுவதாக.
8. அருணாசலம் பிரதேசத்தின் நிமித்தம் இந்தியா சீனாவுக்கு இடையில் பிரச்சனை மூளாதிருப்பதாக.
9. பாகிஸ்தானிலிருந்து செயல்படும் திவீரவாத அமைப்புகள் கர்த்தரால் கட்டிப்போடப்படுவதாக.

## இலவச அறுவை சிகிச்சை

பிறவி சம்பந்தக் குறைபாடுகளை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலம் ஜெர்மன் மருத்துவர்களால் இலவசமாக சரி செய்ய கொடைக்கானல் பாசம் மருத்துவமனையோடு தொடர்பு கொள்ளவும்.

&: (04542) 240668


**Dr. பிரின்ஸ்டன் ஜாய்,** M.B.B.S.,
**Dr. சூசன் பிரின்ஸ்டன்,** M.B.B.S.,
ஒசன்னா ஆலயம், **ஜாய் ஆஸ்பத்திரி,**
**பணகுடி -** 627 109, **தமிழ்நாடு.**
& : (954637) 245273
WEB: www.hosannahchurch.org

# புதியவெப்ஸைட்

I 1. VISIT OUR NEW WEBSITE
(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

2. WEBSITE ADDRESS IS www.hosannahchurch.org
(இணையதள முகவரி : www.hosannahchurch.org)

3. FEATURES INSIDE (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா – ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வாலிபர் பகுதி –ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் –ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் –ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS
(அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

## II கர்த்தருடைய பிள்ளைகளே!

1 ஒரிஸ்ஸாவில் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக மதவாதமும் தீவிரவாதமும் தலைவிரித்து ஆடிக் கொண்டிருக்கிறது. இந்தக் காலத்தில் மௌனமாய் இராமல் ராஜாதி ராஜா இயேசுவின் ஆளுகை செயல்பட உபவாசத்தோடே (முடிந்த நாட்களில்) இரவில் ஜெபியுங்கள்.

கீழ்கண்ட இடங்களில் கர்த்தரே யுத்தம் செய்யும்படி ஜெபியுங்கள்

| | | |
|---|---|---|
| a) திக்காபாலி | b) படிமுண்டா | c) கட்டினிகியா |
| d) டியான்கியா | e) பதன்பாடா | f) ராய்காலா |
| g) சோன்பூர் | h) உலுண்டோ | i) மனம்முதா |
| j) குல்பானி | k) பத்மாபூர் | l) சுனிபள்ளி |
| m) சம்பல்பூர் | n) கமலாதியோ | o) ரஜிகா |
| p) ஜெய்போ | | |

இதுவரை 100 கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். 1000 வீடுகள் நாசமாகியுள்ளன. 250 சபைகள் நாசமாகியுள்ளன. அநேக விசுவாசிகள், ஊழியர்கள் காடுகளில் தங்குகிறார்கள்.

கீழ்கண்ட வசனங்களை வைத்து ஜெபியுங்கள்

| | | |
|---|---|---|
| 1. சங்கீதம் 79/10 | 2. சங் 74/4-12 | 3. பிரசங்கி 8/10-13 |
| 4. சங் 135/10-14 | 5. நீதி 17/13 | 6. ஏசாயா 1/31 |
| 7. எசே 24/6 | 8. தானி 4/31 | 9. எபே 6/18 |
| 10. எரே 50, 51 | 11. வெளி 17, 18 | 12. மத் 23/34, 35 |

1. *Published By :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,

2. *Owned By :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,

3. *Published From :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,
86/222H, Main Road,
Panagudi, Tirunelveli District

4. *Printed By :*
**Mr. Xavier Michael**

5. *Press Name with Full Address :*
**FRAN PRINTING PRESS**
**Mr. Xavier Michael,**
490/2, K.P. Road, Nagercoil - 2.

6. *Name of Editor :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,

7. *Title of News Paper :*
**Pattayam (T/M)**

8. *Registration Number (RNI) :*
**TNTAM / 2004 / 14466**

9. Periodicity : **MONTHLY**



To ..............................................

*If undelivered please return to :*
**Dr. Princeton Joy,** M.B.B.S
**Dr.Susan Princeton,** M.B.B.S
✆ : (954637) 245273
HOSANNAH CHURCH, JOY HOSPITAL
222H, MAIN ROAD, PANAGUDI - 627109.
TIRUNELVELI DISTRICT,
TAMIL NADU, INDIA.

**படியுங்கள், ஜெபியுங்கள், அனைவரும் படிக்க கொடுத்து உதவுங்கள்.**